**நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் (46 பாலங்களை புனரமைத்தல்) செயற்திட்டம் 2019**

---

நானாவித வெளிநாட்டு உதவியளித்தல் (46 பாலங்களை புனரமைத்தல்) செயற்திட்டத்தின் 2019 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் பிரான்ஸ் இன் நெட்டிக்சிஸ் (NATIXIS) வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2012 நவம்பர் 05 ஆம் திகதிய பீ92 0எஜ இலக்க கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் உடன்படிக்கையின் பிரகாரம், தற்போது நெடுஞ்சாலைகள் அமைச்சு என அழைக்கப்படுகின்ற முன்னைய துறைமுகங்கள், கப்பல்துறை மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு கருத்திட்ட நிறைவேற்று முகவராகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை அமுலாக்கல் முகவராகவும் உள்ளன. ஆரம்ப கட்டத்தில் இலங்கைக்கு 46 இரும்பு பாலங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததுடன் கடனட பயன்பாட்டில் கானப்பட்ட சேமிப்பினை பயன்படுத்தி மேலும் 04 பலங்கள் அதனுடன் சேர்க்கப்பட்டிருந்தது. கடன் உடன்படிக்கைகளின் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 7,564 மில்லியனுக்குச் சமமான 45.80 மில்லியன் யூரோவானதுடன் அதில் ரூபா 3,642 மில்லியனுக்குச் சமமான 22.05 மில்லியன் யூரோ நெட்டிக்சிஸ் வங்கியினால் வழங்க உடன்பட்டிருந்தது. செயற்திட்டமானது அதன் நடவடிக்கைகளை 2013 ஜுலை இல் ஆரம்பித்திருந்ததுடன் 2015 ஜுலையில் அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. இருப்பினும், காணிகளின் கொள்வனவு பூர்த்திசெய்யப்பட்டிராததுடன் செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 வரை தயாரிக்கப்பட்டு கணக்கய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

கருத்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.
கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கருத்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முடிவுறுத்தப்பட்டிருப்பினும், மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் செயற்திட்டத்தின் செயற்பாடுகளை குறைப்பதற்கு கடன் உடன்படிக்கையினால் திணிக்கப்பட்ட வரையறைகளை கவனத்தில் கொள்ளாது தொடர்ந்து செல்லும் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட காரியாலயம் 2019 திசெமப்பர் 31 வரை கூட அதன் செயற்பாடுகளை தொடர்ந்திருந்தது. | கணக்கீட்டு கொள்கைகள் சரியற்ற முறையில் விதிக்கப்பட்டது. | செயற்திட்டத்தின் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் 2020 ஆம் ஆண்டில் வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்ததுடன் செயற்திட்ட செலவுகள் மூலதனமாக்கப்பட்டிருந்தன. | செயற்திட்டத்தின் அனைத்து சொத்துக்களும் பொறுப்புக்களும் செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியானதன் பின்னர் உடனடியாக அமுல்படுத்தல் முகவரிற்கு மாற்றப்பட வேண்டியதுடன் முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்களும் தயாரிக்கப்படல் வேண்டும். |

## 3. பௌதீக முன்னேற்றம்

### 3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் ரூபா 3,084.22 மில்லியன் கிரயத்தில் 27 பாலங்கள் பூர்த்திசெய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய 23 பாலங்களினதும் புனர்நிர்மான வேலைகள் ரூபா 3,395.57 மில்லியன் கிரயத்தில் 29 நாட்கள் தொடக்கம் 455 நாட்கள் என்ற வீச்சிலான தாமதத்துடன் 2017 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன.

## 3.2 ஒப்பந்த நிர்வாகம்

| இல | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| | ---------------------- | --------- | ---------------------------- | ------------------ |
| (அ) | செயற்திட்டமானது 13 பாலங்களின் புனரநிர்மான வேலைகளில் ஈடுபட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து ரூபா 68.04 மில்லியன் தொகையான தாமத கட்டணங்கள் அறவிட்டிருந்தும், 10 பாலங்களின் புனர்நிர்மான வேலைகளுடன் தொடர்புபட்ட மொத்தமாக ரூபா 53.08 மில்லியன் புனர்நிர்மான வேலைகளை பூர்த்திசெய்வதற்கு காலநீடிப்பினை வழங்குவதன் மீதான அடிப்படையில் ஒப்பந்ததாரர்களிற்கு 2015 தொடக்கம் 2018 ஆம் ஆண்டுவரை விடுவித்திருந்தது. | ஒப்பந்த நிர்வாகத்தின் பலவீனமான கட்டுப்பாடுகள். | உடன்பட்டனர். | நிர்மான வேலைகளில் தாமதத்தினை குறைக்க நிர்மான வேலைகள் மீது முறையான கண்கானிப்பு ஏற்படுத்தப்படல் வேண்டும். |
| (ஆ) | பாலம் இல.5/8 மற்றும் பாலம் இல.12/3 இன் புனர்நிர்மான வேலைகள் முறையே 2014 திசெம்பர் 16 மற்றும் 2014 நவம்பர் 05 இல் கணிசமான அளவு பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் மேற்கூறிய நிர்மான வேலைகளின் குறைபாட்டு திருத்த காலம் கூட 2015 திசெம்பர் 16 மற்றும் 2015 நவம்பர் 05 இல் முடிவடைந்திருந்தது. இருப்பினும், மேற்கூறிய நிர்மான வேலைகளுடன் தொடர்புபட்ட ரூபா 2.75 மில்லியன் தொகையான பிடிகாசு 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கூட செயற்திட்டத்தின் ஒரு பொறுப்பாக இன்னும் காணப்படுகின்றது. | ஒப்பந்த நிர்வாகத்தின் பலவீனமான கட்டுப்பாடுகள். | ஆர்டிஏ கம்பஹா மற்றும் களுத்துறையின் பிரதம பொறியியலாளர்கள் (சிஇ) 2ஆவது அரையாண்டின் 1.375 மில்லியன் தொகையான பிடிகாசினை விடுவிப்பதில் அவர்களது பதவியில் விசாரிக்கப்பட்டதுடன் அதற்கான பதில் இன்னும் கிடைக்கப்பெறவில்லை. எனவே, மேற்கூறிய பொறுப்புக்களுடன் ஆர்டிஏ விற்கு செயற்திட்டத்தினை கையளிக்க அறிவுறுத்தல் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்த நிபந்தனைகளுடன் இணங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

### 3.3 காணி சுவிகரிப்பு மீதான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
| --- | --- | --- | --- |
| கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், செயற்திட்டத்திற்காக 14 அரச காணித்துண்டுகள் உள்ளடங்களாக 305 காணித்துண்டுகளை கொள்வனவு செய்ய பட்டியலிடப்பட்டிருந்தது. இருப்பினும், 59 காணித்துண்டுகளிற்கான ரூபா 31.49 மில்லியன் தொகையான இழப்பீடு மற்றும் அதன் மீதான வட்டிதொகை ரூபா 4.43 மில்லியன் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இழப்பீடுகளை கொடுப்பதில் தாமதம் காரணமாக செயற்திட்டத்தினால் செலுத்தப்பட்டிருந்தது. காணி கொள்வனவு நடவடிக்கைகள் 2013 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டிருந்தும், 2019 திசெம்பர் 31 இல் 6 1/2 வருடங்கள் கழிந்தும் 80 சதவீதத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் 246 காணித்துண்டுகளின் கொள்வனவினை பூர்த்தி செய்ய செயற்திட்டத்தினால் முடியவில்லை. மேலும், எவ்வித காணி துண்டுகளும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணி சுவீகரிப்பு சட்டத்தின் பிரிவு 44 இன் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்காமை அவதானிக்கப்பட்டது. | காணி கொள்வனவு மீதான வட்டி கிரயங்கள் அதிகரிப்பதற்கும் உரிமையினை வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு மாற்றுவதில் தாமதத்திற்கும் சாத்தியம். | நில அளவை திணைக்களம், பிரதேச செயலகங்கள் மற்றும் மதிப்பீட்டு திணைக்களம் என்பன காணி கொள்வனவு செயன்முறையில் ஈடுபட்டிருந்தான. இருக்கும் விபரங்களின் பிரகாரம், காணி கொள்வனவு செயன்முறை பிரதானமாக பிரதேச செயலக அலுவலகத்திலேயே தாமதமானது. இது தொடர்பாக உரிய பிரதேச செயலகத்திற்கு பல்வேறு ஞாபகமூட்டல்கள் அனுப்பப்பட்டிருந்தன. | காணி கொள்வனவு நடவடிக்கைகளை இலக்கிடப்பட்ட திகதிகளில் பூர்த்திசெய்ய பிரதேச செயலாளர்கள், நிளஅளவை திணைக்களம் மற்றும் மதிப்பீட்டு திணைக்களங்களுடன் முறையான ஒருங்கிணைப்பை பேணல் வேண்டும். |